யுனைடெட் ஓவர்சீஸ் பேங்க் லிமிடெட்
(சிங்கப்பூர் குடியரசில் நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள)
நிறுவனப் பதிவு எண். 193500026Z

# 31 டிசம்பர் 2020-ல் நிறைவடைந்த நிதியாண்டிற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட நிதி அறிக்கைகள்

## முக்கியம்

பின் வரும் நிதித் தகவல்கள் 31 டிசம்பர் 2020-ல் முடிவடைந்த நிதியாண்டிற்கான வங்கி மற்றும் குழுமத்தின் நிதி அறிக்கைக ளில் (முழுமையான நிதி அறிக்கைகள்) உள்ள தகவல்களின் சுருக்கத்தை மட்டும் கொண்டிருக்கும். இந்த நிதித் தகவல்கள், வங்கி மற்றும் குழுமத்தின் முடிவுகளையும் நடப்பு விவகாரங்களையும் குறித்த முழுமையான புரிதலுக்குத் தேவையான தகவல்களைக் கொண்டிருக்கவில்லை. மேலும் தகவல்கள்பெற, தணிக்கை செய்யப்பட்ட முழு நிதி அறிக்கைகள், தணிக்கை செய்யப்பட்ட முழு நிதி அறிக்கைகள் மீதான சார்பற்ற-தணிக்கையாளரின் அறிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும். அவை வங்கியின் இணையத்தளமான www.UOBgroup.com/investor-relations/financial/group-annual-reports.html-ல் கிடைக்கும்.

31 டிசம்பர் 2020-ல் நிறைவடைந்த நிதியாண்டிற்கான

# சார்பற்ற-தணிக்கையாளரின் அறிக்கை

## United Overseas Bank Limited நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கான சார்பற்ற-தணிக்கையாளரின் அறிக்கை

## நிதி அறிக்கைகள் மீதான தணிக்கை பற்றிய அறிக்கை

### கருத்து

யுனைடெட் ஓவர்சீஸ் பேங்க் லிமிடெட் (வங்கி) மற்றும் அதன் துணை நிறுவனங்களின் (கூட்டாக, குழுமம்) நிதி அறிக்கைகளை நாங்கள் தணிக்கை செய்துள்ளோம். அவை பக்கம் #-லிருந்து பக்கம் # வரை கொடுக்கப்பட்டுள்ளது. அதில் 31 டிசம்பர் 2020 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான வங்கி மற்றும் குழுமத்தின் இருப்புநிலை அறிக்கைகள், வருவாய் அறிக்கைகள், விரிவான வருவாய் அறிக்கைகள், வங்கி மற்றும் குழுமத்தின் பங்குமுதலில் உள்ள மாற்றங்களுக்கான அறிக்கைகள், அப்போது முடிவடைந்த ஆண்டிற்கான குழுமத்தின் பணப் புழக்க அறிக்கை மற்றும் முக்கிய கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம் உள்ளிட்ட நிதிநிலை அறிக்கைகளுக்கு விளக்கமளிக்கும் தகவல்கள் ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன.

எங்கள் கருத்துப்படி, உடனிருக்கும் குழுமத்தின் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள் மற்றும் இருப்பு அறிக்கைகள், வருவாய் அறிக்கைகள், விரிவான வருவாய் அறிக்கைகள், வங்கியின் பங்குமுதல் மாற்றங்களின் அறிக்கைகள் ஆகியன நிறுவனச் சட்டத்தின் அத்தியாயம் 50 (சட்டம்) வழங்கும் விதிகளின்படியும், சிங்கப்பூர் நிதிநிலை அறிக்கைத் தரங்களுக்கு (SFRS(I)கள்) ஏற்பவும் 31 டிசம்பர் 2020 நிலவரப்படி, குழுமம் மற்றும் வங்கியின் ஒருங்கிணைந்த நிதி நிலைகள் மற்றும் அதே தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான குழுமம் மற்றும் வங்கியின் ஒருங்கிணைந்த நிதிச் செயல்பாடு, குழுமத்தின் ஒருங்கிணைந்த பங்குமுதல் மாற்றங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பணப் புழக்கங்கள், வங்கியின் ஒருங்கிணைந்த பங்குமுதல் மாற்றங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பணப் புழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தரும் வகையிலும் முறையாக வழங்கப்பட்டுள்ளன.

### கருத்துக்கான அடிப்படை

சிங்கப்பூர் தணிக்கைத் தரங்களின் (SSAs) அடிப்படையில் நாங்கள் எங்களுடைய தணிக்கையை செய்துள்ளோம். அந்தத் தரங்களின் அடிப்படையிலான எங்களுடைய பொறுப்புகள் எங்கள் அறிக்கையின் *நிதி அறிக்கைகள் பகுதியில் தணிக்கைச் செய்வதற்கான தணிக்கையாளரின் பொறுப்புகளில்* விவரிக்கப்பட்டுள்ளன. நாங்கள் கணக்கியல் மற்றும் நிறுவனக் கட்டுப்பாட்டு ஆணையத்தின்(ACRA) *தொழில்முறை நன்னடத்தை விதிகள் மற்றும் பொதுக் கணக்காளர்கள், கணக்கியல் நிறுவனங்களின் (ACRA விதிகள்) நெறிமுறைகளோடு* சிங்கப்பூரில் நிதி அறிக்கைகளை தணிக்கைச் செய்வது தொடர்புடைய நெறிமுறைத் தேவைகளுக்கு உட்பட்டு செயல்படும் ஒரு சார்பற்றக் குழு ஆவோம். இவ்வகைத் தேவைகளின்படியும் ACRA விதிகளின்படியும் நாங்கள் எங்கள் நெறிமுறைப் பொறுப்புக்களை முழுவதுமாக பூர்த்தி செய்துள்ளோம். நாங்கள் பெற்றுள்ள இந்தத் தணிக்கைச் சான்றானது எங்கள் கருத்தின் அடிப்படையை வழங்கப் போதுமானது என நாங்கள் நம்புகிறோம்.

### முக்கியத் தணிக்கை விஷயங்கள்

முக்கியத் தணிக்கை விஷயங்கள் என்பன, எங்கள் தொழில்முறை தீர்ப்பின்படி, தற்காலத்திற்கான நிதி அறிக்கைகளை நாங்கள் தணிக்கை செய்வதற்கு மிகவும் முக்கியம் ஆகும். முழு நிதி அறிக்கைக்கான எங்களுடைய தணிக்கையின் பின்னணியிலும், அதன் பின்னர் எங்களுடைய கருத்தை ஏற்படுத்துவதிலும் இந்த விஷயங்கள் அனைத்தும் கண்டறியப்பட்டன. எங்களுக்கு இந்த விஷயங்களில் வேறுபட்ட கருத்து கிடையாது. கீழ்க்காணும் ஒவ்வொரு விஷயத்துக்கும், அந்த விஷயத்தை எங்கள் தணிக்கை எவ்வாறு கண்டறிந்தது என்பதன் விளக்கம், கண்டுபிடிப்புகள் பற்றிய எந்தவொரு கருத்துகள் அல்லது எங்கள் நடைமுறைகளின் விளைவு போன்றவற்றை உள்ளடக்கியது மற்றும் அந்தப் பின்னணியில் வழங்கப்பட்டுள்ளது.

எங்கள் அறிக்கையின் நிதிநிலை அறிக்கைகள் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அதன் தொடர்புடைய விஷயங்களைத் தணிக்கை செய்வதற்கான தணிக்கையாளின் பொறுப்புகள் அனைத்தையும் நாங்கள் பூர்த்திசெய்திருக்கிறோம். அதற்கேற்றவாறு, எங்கள் தணிக்கையானது நிதிநிலை அறிக்கைகள் பொருளாதார ரீதியான தவறுடன் கூடிய அறிக்கையாக இருப்பதற்கான ஆபத்துகளைக் கண்டறியும் எங்கள் மதிப்பாய்வுக்குப் பதிலாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்ட வழிமுறைகளின் செயல்திறனை உள்ளடக்கியது ஆகும். கீழ்க்காணும் விஷயங்களைக் கண்டறிவதற்கு செய்யப்படும் வழிமுறைகள் உள்ளிட்ட, எங்கள் தணிக்கை வழிமுறைகளின் விளைவுகள், உடனிருக்கும் நிதிநிலை அறிக்கைகளைப் பற்றிய எங்கள் கருத்துக்கான அடிப்படையை வழங்குகிறது.

# பக்க எண்கள் UOB ஆண்டறிக்கை 2020-ல் உள்ள சார்பற்ற தணிக்கையாளரின் அறிக்கையில் குரிப்பிட்டுள்ளபடி.

| கவனத்தில் கொண்ட பகுதிகள் | ஆபத்துக் காரணிகளை எங்களுடைய தணிக்கை எவ்வாறு கண்டறிந்தது |
|---|---|
| **எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள்**<br><br>ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் முறையே 2(d)(vi), 3(a)(i), 3(b), 12, 21(b), 25, 27(b), 28(d), 30(b) மற்றும் 31 ஆகியவற்றைப் பார்க்கவும்.<br><br>குழுமம் அதன் கடன் வெளிப்பாடுகளுக்கான எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பைக் (ECL) கணக்கிடுவதற்கு SFRS(I) 9 நிதிக் கருவிகளின் தேவைகளைப் பின்பற்றுகிறது. கடன் வெளிப்பாடுகள் சேதமடையாக் கடன் வெளிப்பாடுகள் மற்றும் சேதமடைந்த கடன் வெளிப்பாடுகள் எனப் பகுக்கப்படுகின்றன.<br><br>a) <u>சேதமடையாத கடன் வெளிப்பாடுகள்</u><br><br>சேதமடையாத கடன் வெளிப்பாடுகளில் 'எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புக்' கணக்கீடானது குறிப்பிடத்தக்க தீர்ப்புகளையும் மதிப்பீடுகளையும் உள்ளடக்கியது. நிர்வாகத்தின் அதிக அளவிலான தீர்ப்புகள் தேவைப்படும் பகுதிகள் என நாங்கள் அடையாளம் கண்டவை:<br><br>• முன்னோக்கு அடிப்படையில் 'எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளைக்' கணக்கிட, சேதமடையாத கடன் வெளிப்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட பொருளியல் காட்சிகள் மற்றும் நிகழ்தகவு நிறையளவு. அவை சாத்தியமுள்ள எதிர்காலப் பொருளியல் சூழல், குறிப்பாக COVID-19பெருந்தொற்றுநோயின் பொருளாதாரத் தாக்கம் ஆகியவற்றைப் பற்றிய நிர்வாகத்தின் பார்வையைக் குறிக்கிறது.<br><br>• கடன் அபாய அளவுகோலில் குறிப்பிடத்தக்க அளவு உயர்வு (SICR)<br><br>• மாதிரி அனுமானங்கள்; மற்றும்<br><br>• மாதிரி வரம்புகள் அல்லது வளர்ந்து வருகிற போக்குகளை அறிய, மாதிரியால்-இயக்கப்படும் 'எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு' முடிவுகளில் செய்யப்படும் சரிகட்டல்கள் | a) <u>சேதமடையாத கடன் வெளிப்பாடுகள்</u><br><br>பின்னுள்ளவற்றில் கவனம் கொண்டு, சேதமடையாத கடன் வெளிப்பாடுகளைக் கணக்கிடும் முறைகளில் குழுமத்தின் 'எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள்' மீதான முக்கியக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் செயல்திறனை மதிப்பாய்வு செய்தோம்.<br><br>• 'எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள்' கணக்கீட்டு அமைப்புகளில் உள்ளிடப்படும் தரவுகளின் முழுமைத் தன்மை மற்றும் துல்லியம்;<br><br>• மாதிரிகளைச் சரிபார்த்தல்;<br><br>• கோவிட்-19 தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, பொருளியல் காட்சிகள் மற்றும் நிகழ்தகவுகளைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் செயல்படுத்தல்;<br><br>• குழுமத்தின் SICR அளவுகோல் அடிப்படையில் கடன் வெளிப்பாடுகளை ஒழுங்குசெய்தல்; மற்றும்<br><br>• மாதிரிக்குப் பிந்திய சரிகட்டல்கள் மீதான கட்டுப்பாடு.<br><br>மாதிரியெடுத்தல் அடிப்படையில் பின்வரும் நடைமுறைகளைச் செய்ய எங்களுக்கு உதவ எங்களது சொந்த மாதிரியாக்க நிபுணர்களை நாங்கள் ஈடுபடுத்தினோம்<br><br>• மாதிரி சரிபார்ப்பு முடிவுகள் சார்பின்றி மதிப்பாய்வு செய்யப்பட்டது;<br><br>• வாராக் கடனாவதற்கான சாத்தியங்கள் (PD), வாராக் கடனால் ஏற்பட்ட இழப்புகள் (LGD), வாராக் கடனின் அதிகபட்சத் தொகை (EAD), ஆகியவற்றுக்கான நிகழ்தகவுகளின் நியாயத்தன்மையை நாங்கள் கூருணர்திறன் பகுப்பாய்வு, சீரிலக்கு நிர்ணயித்தல் அல்லது பின்-சோதனையிடல் ஆகியவற்றின் மூலம் சோதித்தோம்;<br><br>• எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பினை (ECL) ஈட்டுவதற்கான கணக்கீடுகளில் பயன்படுத்தப்பட்ட வாராக் கடனாவதற்கான சாத்தியங்கள் (PD), வாராக் கடனால் ஏற்பட்ட இழப்புகள் (LGD), வாராக் கடனின் அதிகபட்ச தொகை (EAD), ஆகியவற்றுக்கான நியாயதன்மையை நாங்கள் சோதித்தோம்; மற்றும்<br><br>• அளவுகோல்களை குழுமம் மதிப்பாய்வு செய்வதை மீள்பார்வை செய்தோம்.<br><br>குழுமத்தால் பயன்படுத்தப்பட்ட பொருளியல் காட்சிகள் மற்றும் தொடர்புடைய நிறையளவுகளின் நியாயத்தன்மையை மதிப்பாய்வு செய்வதற்காக, பொருளியல் காட்சிகளைத் தேர்ந்தெடுக்கும் குழுமத்தின் அணுகுமுறையை நாங்கள் மீள்பார்வை செய்தோம். அத்துடன், மாதிரிக்குப் பிந்திய சரிகட்டல்கள் மீதான நிர்வாகத்தின் தர்க்கத்தை மதிப்பாய்வு செய்வதற்கு, குழுமத்தின் SFRS(I) 9 செயல்படும் குழும முடிவுகளைச் சோதித்து, பொருந்துகின்ற இடங்களில் மறுகணக்கீடு செய்தோம். |

| கவனத்தில் கொண்ட பகுதிகள் | ஆபத்துக் காரணிகளை எங்களுடைய தணிக்கை எவ்வாறு கண்டறிந்தது |
|---|---|
| b) சேதமடைந்த கடன் வெளிப்பாடுகள்<br><br>31 டிசம்பர் 2020 நிலவரப்படி, குழுமத்தின் சேதமடைந்த கடன் வெளிப்பாடுகளுக்கான நிலை 3 எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள் $1,692 மில்லியன் ஆக இருந்தது. அதில் 79% குழுமத்தின் மொத்தவிற்பனை வங்கியியல் (GWB) வகைப்பட்டியல் சார்ந்தது.<br><br>குழுமத்தின் மொத்தவிற்பனை வங்கியியல் வகைப்பட்டியலுக்கான நிலை 3 எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பில் நாங்கள் கவனம் செலுத்தினோம், ஏனெனில் இந்த வகைப்பட்டியலில் உள்ள குறைபாட்டை அடையாளம் காணவும் மதிப்பீடு செய்யவும் இயல்பாகவே அகநிலை மற்றும் குறிப்பிடத்தக்க தீர்ப்புகள் தேவை. | b) சேதமடைந்த கடன் வெளிப்பாடுகள்<br><br>குழுமத்தின் மொத்தவிற்பனை வங்கியியல் வகைப்பட்டியலுக்கான நிலை 3 எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பைக் கணக்கிடும் முறைகளில் உள்ள முக்கியக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் செயல்திறனை மதிப்பாய்வு செய்தோம். இந்தக் கட்டுப்பாடுகளில் அடங்கியவை:<br><br>• ஈடு செய்யப்பட்டுள்ள பொருள்களின் மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு;<br>• சேதக் குறிகாட்டிகளை அடையாளம் காணல்;<br>• அறிவிப்பு 612 க்கு ஏற்ப கடன் வகைப்படுத்தல்; மற்றும்<br>• குழுமத்தின் கடன் குழுவினரின் அசட்டை.<br><br>அதிக ஆபத்து இருப்பதாக மதிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்டு எங்கள் தணிக்கை மாதிரியில் கடன் வெளிப்பாடுகளின் அளவு, மாபெரும் பொருளாதாரக் காரணிகள், தொழில் போக்குகள் மற்றும் COVID-19 தொற்றுநோய்த் தொடர்பில் சமீபத்திய முன்னேற்றங்கள் ஆகியவற்றை நாங்கள் கருத்தில் கொண்டோம். COVID-19 தொற்றுநோயால் ஏற்படும் கடன் ஆபத்து அதிகரிப்பு காரணமாக, கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி கூடுதல் நடைமுறைகளை நாங்கள் செய்தோம்:<br><br>• அரசு ஆதரவுக் கடன்கள், சிறப்பு நிவாரணக் கடன்கள் மற்றும் கடன் தடை ஆகியவற்றை அங்கீகரிப்பதற்கான COVID-19 தரவரிசை வழிகாட்டலை மதிப்பாய்வு செய்தோம்; மற்றும்<br>• தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் வாங்குபவர்களின் கடன் மீளாய்வுகளின் ஒரு பகுதியாக, கடன் தரங்களைத் தீர்மானிக்க அரசாங்கத்தின் நடவடிக்கைகள், நிவாரணங்கள் மற்றும் பிற தரம் சார்ந்த அனுமானங்களைக் குழு கருத்தில் கொள்ளுதலின் பொருத்தத்தன்மையை நாங்கள் மதிப்பிட்டோம்.<br><br>சேதமடைந்த கடன்களிலிருந்து நாங்கள் தேர்ந்தெடுத்த மாதிரிக்கு, நாங்கள் பின்வரும் நடைமுறைகளைச் செய்தோம்:<br><br>• மீட்டெடுப்புகளின் அளவு மற்றும் நேரத்திற்கான அடிப்படை உட்பட மீட்டெடுக்கக்கூடிய பணப்புழக்கங்கள் பற்றிய நிர்வாகத்தின் முன்கணிப்பை மதிப்பாய்வு செய்தோம். சாத்தியமான இடங்களில், முக்கிய அனுமானங்களை வெளிப்புற ஆதாரங்களுடன் ஒப்பிட்டோம், எ.கா. பிணைகளின் சார்பற்ற மதிப்பீட்டு அறிக்கைகள்;<br>• எதிரான செய்திகளைத் தேடல் மற்றும்/அல்லது பொதுவில் கிடைக்கக்கூடிய தகவல்கள் மூலம் கடன் வாங்குபவர்களின் சமீபத்திய முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு உறுதிப்படுத்தினோம்;<br>• கடன் ஒப்பந்தங்கள் போன்ற மூல ஆவணங்களை ஒப்புக்கொள்வதன் மூலம் அடிப்படைத் தரவு துல்லியமானது எனச் சரிபார்க்கப்பட்டது; மற்றும்<br>• கணக்கீடுகள் சோதிக்கப்பட்டது.<br><br>ஒட்டுமொத்தமாக, குழுமத்தின் 'எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள்' பற்றிய எங்கள் மதிப்பீட்டின் முடிவுகள் நியாயமான எதிர்பார்ப்புகளுக்குள் இருந்தன. |

| கவனத்தில் கொண்ட பகுதிகள் | ஆபத்துக் காரணிகளை எங்களுடைய தணிக்கை எவ்வாறு கண்டறிந்தது |
|---|---|
| **பணமாக்க இயலாத அல்லது சிக்கலான நிதிக் கருவிகளை மதிப்பிடல்**<br><br>ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் முறையே 2(d)(ii), 3(a)(ii) மற்றும் 19(b) ஆகியவற்றைப் பார்க்கவும்.<br><br>31 டிசம்பர் 2020 நிலவரப்படி, நியாயமான மதிப்பில் மதிப்பிடப்பட்ட குழுமத்தின் மொத்த நிதிக்கருவிகளில் 6% ($5 பில்லியன்) நிலை 3 என வகைப்படுத்தப்பட்டது. நிலை 3 நிதிக் கருவிகள் முக்கியமாக பங்குச் சந்தையில் பட்டியலிடப்படாத பங்குமுதல் முதலீடுகள் மற்றும் நிதிகளைக் கொண்டது. மேலும் நீண்ட கால பங்குமுதல் வழிப்பொருட்கள், முழுவளர்ச்சிக்கு முன் பணமாக்கக்கூடியவற்றின் வட்டி விகிதப் பரிமாற்றுகள் மற்றும் பங்குச் சந்தையில் பட்டியலிடப்படாத கடன் பாதுகாப்புப் பத்திரங்கள் ஆகியனவற்றையும் கொண்டது.<br><br>நிலை 3 விலைகளை மதிப்பிடுவதற்கு சந்தை-சார்ந்த தரவுகள் கிடைக்காததைக் கருத்தில் கொண்டும், நிர்வாகத்தால் செய்யப்பட்ட மதிப்பீட்டு நுட்பங்களில் பயன்படுத்தப்படும் தீர்ப்புகள், அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றின் காரணமாகவும் நிலை 3 நிதிக் கருவிகளை மதிப்பிடுவது எங்கள் தணிக்கையில் முக்கியமாகக் கவனம் கொள்ளப்பட்ட பகுதியாகும். | நிலை 3 நிதிக் கருவிகளை மதிப்பிடும் செயல்முறைகளில் உள்ள குழுமத்தின் முக்கியக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் செயல்திறனைச் சோதித்தோம். இதில் பின்வருவனவற்றுக்கான கட்டுப்பாடுகளும் அடங்கும்:<br><br>• மாதிரி-சரிபார்ப்பு மற்றும் ஒப்புகை;<br><br>• விலை உள்ளீடுகளின் அவதானிப்பு, முழுமைத்தன்மை மற்றும் துல்லியம்; மற்றும்<br><br>• சார்பற்ற விலைச் சரிபார்ப்புகள்.<br><br>கூடுதலாக, மதிப்பீட்டு முறையமைப்புகள், அனுமானங்கள் மற்றும் குறிப்பிடத்தக்க கவனிக்கமுடியாத உள்ளீடுகளைக் கொண்ட நிதிக் கருவிகளின் மாதிரிக்கு நிர்வாகத்தால் பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகள் ஆகியவற்றின் நியாயத்தன்மையை எங்கள் உள்-சிறப்பு நிபுணர்களின் உதவியுடன் நாங்கள் மதிப்பீடு செய்தோம்.<br><br>பணமாக்க இயலாத அல்லது சிக்கலான நிதிக் கருவிகளைப் பற்றிய குழுமத்தின் மதிப்பீடுகள் தொடர்பான எங்கள் மதிப்பீடு எதிர்பார்த்த விளைவுகளின் வரம்பினுள் இருந்தது. |
| **நன்மதிப்பில் சேதம்**<br><br>ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் முறையே 2(i), 3(a)(iii) மற்றும் 37 ஆகியவற்றைப் பார்க்கவும்.<br><br>31 டிசம்பர் 2020 நிலவரப்படி, குழுமத்தின் இருப்புநிலை அறிக்கையில் நன்மதிப்பு இருப்பு $4 பில்லியனாக உள்ளது. நன்மதிப்பு குழுமத்தின் இயக்கு பிரிவுகளால் வரையறுக்கப்பட்டுள்ள அந்தந்த ரொக்கம்-உருவாக்கும் அலகுகளுக்கு (“CGUs”) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>சேதச் சோதனை என்பது ஒவ்வொரு CGU வின் பயன்பாட்டில்-உள்ள-மதிப்பின் (“VIU”) கணக்கீடுகளைச் சார்ந்தது ஆகும். அது வருங்காலத்திற்கான CGU-க்களின் பணப்புழக்கம் மற்றும் கழிவு வீதங்கள் பற்றிய நிர்வாகத்தின் குறிப்பிடத்தக்க தீர்ப்புகள் மற்றும் கணிப்புகளை உள்ளடக்கியது என்ற காரணத்தினால் நாங்கள் இந்தப் பகுதியில் முக்கியமாகக் கவனம் செலுத்தினோம். | குறைந்த 'ரொக்கவளப் பற்றாக்குறை' அல்லது கணிசமாகக் குறைக்கப்பட்ட 'ரொக்கவளப் பற்றாக்குறை' கொண்ட CGUகளில் நாங்கள் கவனம் செலுத்தினோம். எங்கள் பணியில் பின்வருவன அடங்கும்:<br><br>• CGU பகுத்தலின் பொருத்தத்தன்மையை மதிப்பாய்வு செய்தோம்;<br><br>• கணிப்புகளின் வரலாற்று ரீதியிலான சாதனைகளை மதிப்பாய்வு செய்வதன் மூலம் முன்கணிப்பு செயல்முறையை மதிப்பீடு செய்தோம்;<br><br>• COVID-19 தொற்றுநோயின் தாக்கத்தை நிர்வாகம் கருத்தில் கொள்வது மற்றும் மாபெரும் பொருளாதாரச் சூழலின் தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்மை உள்ளிட்டவை தொடர்பான கணிப்புகளில் பயன்படுத்தப்படும் முக்கிய அனுமானங்களின் நியாயத்தை மதிப்பிட்டோம்;<br><br>• நிர்வாகத்தால் பயன்படுத்தப்பட்ட நீண்டகால வளர்ச்சி விகிதங்கள் மற்றும் தள்ளுபடி விகிதங்கள், எங்கள் நிபுணர்கள் செய்த கணக்கீடுகள் மற்றும் வெளிச் சந்தைத் தரவைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்பட்ட எங்கள் அளவு எல்லைகளுடன் ஒப்பிடப்பட்டன; மற்றும்<br><br>• VIU கணக்கீடுகளில் சேத ஆபத்துகளைக் கொண்ட CGUகள் ஏதும் இருக்கிறதா என்பதைக் கண்டறிய முக்கிய அனுமானங்களில் ஒரு நியாயமான சாத்தியமுள்ள மாற்றத்தின் தாக்கத்தைத் தீர்மானிப்பதற்கு நாங்கள் உணர்திறன் பகுப்பாய்வுகளைச் செய்துள்ளோம்.<br><br>எங்கள் தணிக்கை நடைமுறைக முடிவுகளின் அடிப்படையில், நல்மதிப்புச் சேதச் சோதனைகளில் நிர்வாகத்தால் பயன்படுத்தப்பட்டுள்ள அனுமானங்கள் ஒரு நியாயமான எதிர்பார்ப்புகளின் வரம்பிற்குள் இருந்தன. |

## மற்றத் தகவல்

மற்றத் தகவல்களுக்கு நிர்வாகம் மட்டும் பொறுப்பு ஆகும். எங்கள் தணிக்கையாளர் அறிக்கையின் முன் தேதியில் நாங்கள் இயக்குநரின் அறிக்கை (ஆனால் இதில் நிதிநிலை அறிக்கை மற்றும் எங்கள் தணிக்கையாளர் அறிக்கை உள்ளடங்காது) மற்றும் ஆண்டறிக்கையின் மற்றப் பகுதிகள் (மற்றப் பகுதிகள்) மற்றத் தகவலில் அடங்கும். மேலும் இந்த மற்றப் பகுதிகள் தணிக்கையாளர் அறிக்கையின் தேதிக்குப் பின்னர் எங்களுக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கிறோம்.

நிதிநிலை அறிக்கைகள் பற்றிய எங்கள் அபிப்ராயம் மற்ற தகவல்களுக்குப் பொருந்தாது. நாங்கள் அதற்கு எந்தவகையான உத்தரவாத முடிவும் தெரிவிக்கமாட்டோம்.

நிதியியல் அறிக்கைகளின் கணக்காய்வு சம்பந்தமான, எங்கள் பொறுப்பு என்பது மேல் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற தகவல்களை வாசித்து, அவ்வாறு வாசிக்கும்போது, பொருளாதார ரீதியாக நிதியியல் அறிக்கைகளுடன் அல்லது கணக்காய்வில் எங்களுக்குக் கிட்டிய அறிவுடன் சீரற்று உள்ளதா எனப் பரிசீலிப்பதும், அல்லது வேறுவகையில் பொருளாதார ரீதியாக தவறாக உள்ளதா எனப் பரிசீலிப்பதும் ஆகும்.

இந்தத் தணிக்கையாளர் அறிக்கையின் தேதிக்கு முன்னர் நாங்கள் பெற்ற மற்றத் தகவல்களில் நாங்கள் செய்திருக்கும் வேலைகளை அடிப்படையாக வைத்து, அதில் ஏதேனும் பொருளாதாரத் தவறுடன் கூடிய அறிவிப்புகள் இருப்பின், அந்த உண்மையை நாங்கள் அறிவிப்பது அவசியம். அந்த வகையில் தற்போது நாங்கள் அறிவிப்பதற்கு ஒன்றும் இல்லை.

நாங்கள் மற்றப் பகுதிகளை வாசிக்கும்போது, அங்கு பொருளாதாரப் பிழையுடன் கூடிய அறிவிப்பு ஏதேனும் இருப்பதாக முடிவு செய்தால், நாங்கள் அதனை இயக்குநர்களிடன் தெரிவித்து SSA-க்கு ஏற்றவகையில் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## நிதி அறிக்கைளுக்கான நிர்வாகம் மற்றும் இயக்குநர்களின் பொறுப்பு

சட்ட நடைமுறைகளுக்கும் FRSகளுக்கும் உட்பட்டு உண்மையான மற்றும் நல்ல பார்வையை வழங்குகின்ற நிதி அறிக்கைகளை தயார்படுத்துவது நிர்வாகத்தின் பொறுப்பாகும். மேலும் சொத்துக்களை அங்கீகாரமற்றப் பயன்பாடு மற்றும் சார்பு போன்ற இழப்புக்களிலிருந்து பாதுகாப்பதற்கு போதுமான அலுவலக உள் கணக்குக் கட்டுப்பாடுகளைக் கொண்ட அமைப்பு ஒன்றை தோற்றுவித்துப் பராமரிப்பதும்; உண்மையான மற்றும் சரியான நிதி அறிக்கைகளை தயாரிக்கவும் சொத்துக்களின் பொறுப்புடைமையை பராமரிக்கவும் ஏதுவான வகையில் பணப் பரிமாற்றங்கள் சரியாக அங்கீகரிக்கப்பட்டு பதிவு செய்யப்படுவதை உறுதி செய்வதும் நிர்வாகத்தின் கடமை ஆகும்.

நிதி அறிக்கைகளை தயாரிக்கும்போது, தொடர்ந்து இயங்கும், வெளிக்காட்டும், பொருந்தக்கூடிய வகையில், தொடர்ந்து இயங்கும் நிறுவனத்திற்குத் தொடர்புடைய விஷயங்கள் மற்றும் தொடர்ந்து இயங்கும் நிறுவனத்தின் கணக்கியலைப் பயன்படுத்துதல் போன்ற குழுமத்தின் திறன்களை நிர்வாகம் செயல்பாடுகளை நிறுத்தவோ அல்லது குழுமத்தினை பணமாக்கவோ இல்லாத பட்சத்தில் மதிப்பாய்வு செய்வது நிர்வாகத்தின் பொறுப்பு ஆகும்.

குழுமத்தின் நிதி அறிக்கை தயாரித்தல் முறைகளை மேற்பார்வையிடுவது இயக்குனரின் பொறுப்பில் உள்ளடங்கும்.

## நிதி அறிக்கைகளைத் தணிக்கை செய்வதற்கான தணிக்கையாளரின் பொறுப்புகள்

நிதி அறிக்கைகள் முழுவதுமாக, மோசடி அல்லது தவறு காரணமாக எந்த முக்கிய புரட்டும் இல்லாத அறிக்கையாக இருப்பதற்கான ஏற்கக்கூடிய அளவிலான உத்தரவாதத்தைப் பெறுவதும் எங்கள் கருத்துக்களை உள்ளடக்கிய தணிக்கையாளர் அறிக்கை வழங்குவதும் எங்கள் நோக்கம் ஆகும். ஏற்கக்கூடிய அளவிலான உத்தரவாதம் என்பது ஒரு உயர் மட்ட உத்தரவாதம் ஆகும், ஆனால் SSAக்களுக்கு உட்பட்டு நடத்தப்பட்ட தணிக்கையானது, முக்கிய புரட்டு ஏதேனும் இருக்கும் பட்சத்தில் அதனைக் கண்டறியும் என்ற உத்தரவாதம் கிடையாது. உண்மைப் புரட்டுகள் மோசடி காரணமாகவோ அல்லது தவறு காரணமாகவோ எழுகின்றன. அவை, தனியாகவோ அல்லது மொத்தமாக சேர்ந்தோ, இந்த நிதி அறிக்கைகளின் அடிப்படையில் பயனர்கள் எடுக்கின்ற முடிவுகளில் போதுமான பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடுமாயின், முக்கிய புரட்ட்டாகக் கருதப்படும்.

SSAக்களுக்கு உட்பட்ட தணிக்கையின் ஒரு பகுதியாக, தணிக்கை முழுவதும் நாங்கள் தொழில்முறைத் தீர்ப்புக்களையும் தொழில்முறை ஐயறவினையும் கொண்டிருந்தோம். மேலும் நாங்கள்:

- மோசடி காரணமாகவோ அல்லது தவறு காரணமாகவோ, நிதி அறிக்கைகளில் முக்கிய புரட்டு அபாயங்களை அடையாளம் கண்டு மதிப்பாய்வு செய்தோம். அத்தகைய அபாயங்களுக்கு ஏற்ப தணிக்கை முறைகளை வடிவமைத்து செயல்படுத்தினோம். மேலும், எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்குவதற்கு ஏற்ற, போதுமான தணிக்கைச் சான்றுகளை பெற்றோம். தவறின் விளைவாக ஏற்படும் முக்கிய புரட்டை விட மோசடியின் விளைவாக ஏற்படும் முக்கிய புரட்டினை கண்டறியாமல் இருப்பது, அத்தகைய மோசடி உள்கூட்டு, மோசடி, வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வழிகாட்டல், அல்லது அகக்கட்டுப்பாட்டை மீறல் போன்றவற்றை உள்ளடக்கிய காரணத்தினால் மிகவும் பெரிய அபாயம் ஆகும்.

- தொடர்புடைய உட்புறக் கட்டுப்பாடுகளைப் பற்றிய புரிந்துணர்வைப் பெறுவது சூழ்நிலைகளுக்கு ஏற்ற வகையில் தணிக்கை முறைகளை வடிவமைப்பதற்காக மட்டுமே. குழுமத்தின் உட்புறக் கட்டுப்பாடுகளைப் பற்றிய கருத்து வெளிப்படுத்தும் நோக்கிற்காக அல்ல.

- நிர்வாகத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகளின் சரியான தன்மை, கணக்கியல் மதிப்பீடுகளின் ஏற்கக்கூடிய தன்மை மற்றும் தொடர்புடைய விவரங்கள் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்தோம்.

- கணக்கியல் அடிப்படையில் இயங்கும் நிறுவனமாக நிர்வாகம் பயன்படுத்தியுள்ளமையின் சரிதன்மையை முடிவு செய்தோம். மற்றும் பெறப்பட்ட தணிக்கைச் சான்றுகளின் அடிப்படையில், தொடர்ந்து இயங்குவதற்கான குழுமத்தின் திறன் மீது முக்கிய சந்தேகம் வரும் வகையிலான நிகழ்வுகள் அல்லது நிலைகள் தொடர்புடைய முக்கியமான உறுதியற்றநிலை இருக்கிறதா என பெறப்பட்ட தணிக்கைச் சான்றுகளின் அடிப்படையில் முடிவு செய்தோம். அவ்வாறாக ஒரு முக்கிய உறுதியற்ற தன்மை இருக்குமாயின் அல்லது, அத்தகைய ஆவணங்கள் எங்கள் கருத்தினை மாற்றுவதற்கு போதுமானதாக இல்லாதபோது நிதி அறிக்கைகள் தொடர்புடைய ஆவணங்களுக்கான எங்களுடைய தணிக்கையாளர் அறிக்கையில் கவனத்தை ஈர்க்க வேண்டியது எங்கள் கடமையாகும். எங்கள் முடிவுகள் அனைத்தும் எங்கள் தணிக்கையாளர் அறிக்கையின் தேதி வரைக்குமான தணிக்கைச் சான்றுகளின் அடிப்படையிலானவை. இருப்பினும், பிந்தைய நிகழ்வுகள் அல்லது நிலைகள் ஒரு இயங்கும் நிறுவனமாக குழுமம் தொடராமல் இருப்பதைத் தோற்றுவிக்கலாம்.

- ஆவணங்கள் உட்பட நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த அளிப்பு, அமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்தோம். மேலும், நிதி அறிக்கைகள் அதன் கீழுள்ள பணப் பரிமாற்றங்கங்கள் மற்றும் நிகழ்வுகளை சரியாக அளிக்கும் விதமாக குறிப்பிடுகின்றனவா எனவும் மதிப்பாய்வு செய்தோம்.

- தொகுக்கப்பட்ட நிதி அறிக்கைகளைப் பற்றி ஒரு கருத்து வெளிப்படுத்துவதற்காக உறுப்பு நிறுவனங்களின் அல்லது முழுமத்தினுள் உள்ள வியாபார செயல்பாடுகளின் நிதித் தகவல்கள் போதுமான அளவில் சரியான தணிக்கைச் சான்றுகளினைப் பெற்றோம். குழும தணிக்கையின் திசை, மேற்பார்வை மற்றும் செயல்பாடு ஆகியவற்றிற்கு நாங்கள் பொறுப்பாவோம். நாங்கள் எங்கள் தணிக்கைக் கருத்துக்கு முழு பொறுப்பையும் ஏற்கிறோம்.

மற்ற விஷயங்களுடன் சேர்த்து திட்டமிடப்பட்ட தணிக்கை வரம்பு மற்றும் கால அளவு மற்றும் தணிக்கையின் போது நாங்கள் உட்புற கட்டுப்பாடுகளில் கண்டறிந்துள்ள ஏதேனும் முக்கிய குறைபாடுகள் உட்பட தணிக்கையில் கண்டறியப்பட்டுள்ள முக்கிய விஷயங்கள் குறித்து இயக்குனர்களிடம் நாங்கள் தெரியப்படுத்தினோம்.

தந்திரமான தணிக்கை தொடர்பாகவும் எல்லா உறவுகள் மற்றும் எங்களது சுதந்திரமான தணிக்கைக்கு ஏற்கக்கூடிய அளவில் ஏற்கவேண்டிய மற்ற விஷயங்கள், பொருந்தும் இடங்களில், தொடர்புடைய பாதுகாப்புகள் குறித்தும் தேவைப்படுகின்ற தொடர்புடைய நன்னெறிகள் பற்றி நாங்கள் இயக்குனர்களுக்கு அறிக்கையளித்திருக்கிறோம்.

இயக்குனர்களுடன் கலந்துகொண்ட விஷயங்களில் இருந்து, நடப்புக் காலத்திற்கான நிதி அறிக்கைகளை தணிக்கை செய்வதற்கான முக்கிய விஷயங்களை தீர்மானித்தோம். அவையே முக்கிய தணிக்கை விஷயங்கள் ஆகும். சட்டபடியோ அல்லது வழிமுறைகளின் படி இந்த விஷயங்களைப் பற்றிய எங்கள் அறிக்கையில் பொது வெளிப்பாடு செய்தல் எதிர் மறையான விளைவுகளை ஏற்படுத்தும் பட்சத்திலோ அல்லாமல் அத்தகைய விஷயங்களை எங்கள் தணிக்கை அறிக்கையில், விவரித்திருக்கிறோம்.

## பிற சட்டப்பூர்வ மற்றும் கட்டுப்பாட்டுத் தேவைகள் மீதான அறிக்கை

எங்கள் கருத்துப்படி, சட்டத்தின் தேவைக்கு எற்ப வங்கியினாலும் சிங்கப்பூரில் பதிவுசெய்யப்பட்ட அதன் துணை நிறுவனங்களாலும் பரமரிக்கப்படவேண்டிய கணக்கியல் மற்றும் பிற பதிவுகள் சட்டத்தின் விதிகளுக்கு ஏற்ப கணக்குகள் முறையாக வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த சார்பற்ற தணிக்கையாளரின் அறிக்கைக்கான தணிக்கையின் ஏற்பாட்டுப் பங்காளர் திரு. வில்சன் வூ சியூ வாஹ்.

ERNST & YOUNG LLP
பொதுத் தணிக்கையாளர்கள் மற்றும் பட்டயக் கணக்கர்கள்
சிங்கப்பூர்

24 பிப்ரவரி 2021

31 டிசம்பர் 2020-ல் நிறைவடைந்த ஆண்டிற்கான

# வருவாய் அறிக்கைகள்

| | குழுமம் | | வங்கி | |
|---|---|---|---|---|
| **$ மில்லியன்களில்** | **2020** | 2019 | **2020** | 2019 |
| வட்டி வருவாய் | **9,623** | 12,557 | **6,218** | 8,829 |
| கழிக்க: வட்டிச் செலவுகள் | **3,588** | 5,994 | **2,286** | 4,293 |
| **நிகர வட்டி வருவாய்** | **6,035** | 6,563 | **3,932** | 4,536 |
| நிகரக் கட்டணம் மற்றும் தரகு வருவாய் | **1,997** | 2,032 | **1,412** | 1,392 |
| லாப ஈவு வருவாய் | **50** | 51 | **316** | 289 |
| வாடகை வருவாய் | **106** | 110 | **80** | 95 |
| நிகர வர்த்தக வருவாய் | **594** | 874 | **358** | 622 |
| முதலீட்டுப் பத்திரங்களில் இருந்து பெற்ற நிகர லாபம் | **286** | 242 | **129** | 143 |
| பிற வருவாய் | **108** | 158 | **235** | 193 |
| **வட்டியல்லாத வருவாய்** | **3,141** | 3,467 | **2,530** | 2,734 |
| **மொத்த இயக்கு வருவாய்** | **9,176** | 10,030 | **6,462** | 7,270 |
| கழிக்க: ஊழியர்ச் செலவுகள் | **2,501** | 2,716 | **1,528** | 1,644 |
| பிற இயக்குச் செலவுகள் | **1,683** | 1,756 | **1,088** | 1,135 |
| **மொத்த இயக்குச் செலவுகள்** | **4,184** | 4,472 | **2,616** | 2,779 |
| **கொடுப்பணவுகளுக்கு முன்னால் உள்ள இயக்கு இலாபம்** | **4,992** | 5,558 | **3,846** | 4,491 |
| கழிக்க: கடன் மற்றும் மற்ற இழப்புகளுக்கான கொடுப்பணவு | **1,554** | 435 | **899** | 174 |
| **கொடுப்பணவுகளுக்குப் பிறகு உள்ள இயக்கு இலாபம்** | **3,438** | 5,123 | **2,947** | 4,317 |
| கூட்டாளிகள் மற்றும் கூட்டு முயற்சிகளுக்கான இலாபப்பங்கு | **98** | 51 | **–** | – |
| **வரிக்கு முந்தைய இலாபம்** | **3,536** | 5,174 | **2,947** | 4,317 |
| கழிக்க: வரி | **606** | 812 | **424** | 587 |
| **நிதியாண்டுக்கான இலாபம்** | **2,930** | 4,362 | **2,523** | 3,730 |
| உரிமையுடைமை: | | | | |
| **வங்கியின் பங்குதாரர்கள்** | **2,915** | 4,343 | **2,523** | 3,730 |
| கட்டுப்பாடில்லாத உரிமையுள்ளவர்கள் | **15** | 19 | **–** | – |
| | **2,930** | 4,362 | **2,523** | 3,730 |

| **ஒவ்வொரு பங்குக்கான வருமானம்** | | |
|---|---|---|
| அடிப்படை | **1.69** | 2.55 |
| தளர்த்தப்பட்டது | **1.68** | 2.54 |

31 டிசம்பர் 2020-ல் நிறைவடைந்த ஆண்டிற்கான

# விரிவான வருவாய் அறிக்கைகள்

| | குழுமம் | | வங்கி | |
|---|---|---|---|---|
| **$ மில்லியன்களில்** | **2020** | 2019 | **2020** | 2019 |
| நிதியாண்டுக்கான இலாபம் | **2,930** | 4,362 | **2,523** | 3,730 |
| **வருவாய் அறிக்கையில் மறுவகைப்படுத்தப்படாத பிற விரிவான வருவாய்** | | | | |
| மற்ற விரிவான வருவாய் வழியாக நியாயமான மதிப்பில் பங்குமுதல் கருவிகளில் ஏற்பட்ட மொத்த இலாபம்/ (இழப்பு) | **1** | (845) | **(16)** | (870) |
| வங்கியின் சொந்தக் கடன் ஆபத்து காரணமாக நியாயமான மதிப்பில் ஒதுக்கப்பட்ட நிதிசார்ந்த கடன்பொறுப்புகளில் நியாயமான மதிப்பு மாற்றங்கள் | **(4)** | (62) | **(4)** | (62) |
| வரையறுக்கப்பட்ட நன்மைப் பொறுப்பின் மறு மதிப்பீடு | **(1)** | # | **#** | # |
| பிற விரிவான வருவாய் மூலம் நியாயமான மதிப்பு கொண்ட பொருட்கள் மீதான தொடர்புடைய வரி | **#** | (14) | **2** | (11) |
| | **(4)** | (921) | **(18)** | (943) |
| **வருவாய் அறிக்கையில் பின்னர் மறுவகைப்படுத்த வாய்ப்புள்ள பிற விரிவான வருவாய்** | | | | |
| நாணய மாற்றுச் சரிகட்டல்கள் | **(22)** | 146 | **15** | (11) |
| பிற விரிவான வருவாய் மூலம் பெற்ற கடன் கருவிகளின் நியாயமான மதிப்பு | | | | |
| நியாயமான மதிப்பில் மாற்றம் | **384** | 446 | **295** | 338 |
| விற்கும்போது, வருவாய் அறிக்கையில் மாற்றம் | **(109)** | (117) | **(98)** | (104) |
| எதிர்பார்த்த கடன் இழப்புகளுக்கான கொடுப்பனவுகளில் மாற்றங்கள் | **7** | (52) | **10** | (55) |
| தொடர்புடைய வரி | **(22)** | 38 | **(5)** | 61 |
| | **238** | 461 | **217** | 229 |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு கூட்டு முயற்சிகளின் பிற விரிவான வருமானத்தின் பங்கு மாற்றம் | **(6)** | 9 | **–** | – |
| **நிதி ஆண்டுக்கான பிற விரிவான வருமானம், நிகர வரி** | **228** | (451) | **199** | (714) |
| **நிதி ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம், நிகர வரி** | **3,158** | 3,911 | **2,722** | 3,016 |
| | | | | |
| உரிமையுடைமை: | | | | |
| **வங்கியின் பங்குமுதல் வைத்திருப்பவர்கள்** | **3,143** | 3,885 | **2,722** | 3,016 |
| கட்டுப்பாடுகளில்லாத உரிமை உள்ளவர்கள் | **15** | 26 | **–** | – |
| | **3,158** | 3,911 | **2,722** | 3,016 |

*# $500,000-க்குக் குறைவான தொகை*

31 டிசம்பர் 2020 நிலவரப்படி

# இருப்புநிலை அறிக்கை

| $ மில்லியன்களில் | குழுமம் 2020 | குழுமம் 2019 | வங்கி 2020 | வங்கி 2019 |
|---|---|---|---|---|
| **பங்குமுதல்** | | | | |
| பங்குமூலதனம் மற்றும் மற்ற மூலதனம் | 7,420 | 7,325 | 7,420 | 7,325 |
| தக்கவைக்கப்பட்ட வருவாய்கள் | 24,109 | 23,404 | 17,510 | 17,197 |
| பிற காப்புநிதிகள் | 9,372 | 8,907 | 9,786 | 9,351 |
| **வங்கியின் பங்குமுதல் வைத்திருப்பவர்களுக்குச் செல்லவேண்டிய பங்குமுதல்** | 40,901 | 39,636 | 34,716 | 33,873 |
| கட்டுப்பாடுகளில்லாத உரிமை உள்ளவர்கள் | 230 | 228 | – | – |
| **மொத்தப் பங்குமுதல்** | 41,131 | 39,864 | 34,716 | 33,873 |
| **கடன் பொறுப்புகள்** | | | | |
| இவைகளுடைய வைப்புத்தொகைகள் மற்றும் இருப்புத்தொகைகள்: | | | | |
| வங்கிகள் | 15,977 | 15,302 | 14,257 | 13,404 |
| வாடிக்கையாளர்கள் | 324,598 | 310,726 | 251,111 | 241,462 |
| துணை நிறுவனங்கள் | – | – | 14,216 | 13,419 |
| செலுத்தவேண்டிய கட்டணச் சீட்டுகள் மற்றும் வரைவோலைகள் | 792 | 646 | 613 | 465 |
| வழிப்பொருள் நிதிக் கடன் பொறுப்புகள் | 11,519 | 6,695 | 8,741 | 5,695 |
| பிறக் கடன் பொறுப்புகள் | 7,379 | 5,179 | 5,954 | 3,667 |
| செலுத்தத்த வேண்டிய வரிகள் | 374 | 489 | 278 | 410 |
| ஒதுக்கப்பட்ட வரிக் கடன் பொறுப்புகள் | 436 | 299 | 263 | 202 |
| வழங்கப்பட்ட கடன்கள் | 29,608 | 25,209 | 28,086 | 23,557 |
| **மொத்தக் கடன் பொறுப்புகள்** | 390,683 | 364,545 | 323,519 | 302,281 |
| **மொத்தப் பங்குமுதல் மற்றும் கடன் பொறுப்புகள்** | 431,814 | 404,409 | 358,235 | 336,154 |
| **சொத்துகள்** | | | | |
| மத்திய வங்கியிலுள்ள ரொக்கம், கையிருப்புகள் மற்றும் வைப்பு நிதிகள் | 36,798 | 25,864 | 31,452 | 22,319 |
| சிங்கப்பூர் அரசாங்கக் கருவூல உறுதிச்சீட்டு மற்றும் பிணைப்பத்திரங்கள் | 8,103 | 6,199 | 8,103 | 6,199 |
| மற்ற அரசாங்கக் கருவூல உறுதிச்சீட்டு மற்றும் பிணைப்பத்திரங்கள் | 13,890 | 15,166 | 3,796 | 5,120 |
| வர்த்தகப் பிணைப்பத்திரங்கள் | 4,215 | 2,789 | 3,523 | 2,506 |
| வங்கிகளிடம் இருக்கும் இருப்புகள் மற்றும் கைமாற்றுகள் | 40,284 | 52,840 | 30,409 | 42,456 |
| வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்பட்ட கடன்கள் | 277,201 | 265,458 | 216,629 | 205,229 |
| துணை நிறுவனங்களில் உள்ள கைமாற்றுகள் மற்றும் வழங்கப்பட்ட முன்பணங்கள் | – | – | 21,023 | 17,971 |
| வழிப்பொருள் நிதிச் சொத்துகள் | 11,368 | 6,408 | 8,719 | 5,394 |
| முதலீட்டுப் பத்திரங்கள் | 25,217 | 15,454 | 18,158 | 12,723 |
| மற்றச் சொத்துகள் | 5,033 | 4,906 | 3,428 | 3,528 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துகள் | 429 | 300 | 109 | 96 |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளில் உள்ள முதலீடுகள் | 1,210 | 1,182 | 325 | 350 |
| துணை நிறுவனங்களில் உள்ள முதலீடுகள் | – | – | 6,199 | 6,005 |
| முதலீட்டுச் சொத்துகள் | 964 | 936 | 979 | 970 |
| நிலையான சொத்துகள் | 2,959 | 2,759 | 2,201 | 2,106 |
| புலனாகாச் சொத்துகள் | 4,143 | 4,148 | 3,182 | 3,182 |
| **மொத்தச் சொத்துகள்** | 431,814 | 404,409 | 358,235 | 336,154 |

# மூலதன போதுமானதன்மை விகிதங்கள்

MAS அறிவிக்கை 637ல் குறிப்பிடப்பட்டுள்ள பேசல் III (Basel III) மூலதன போதுமானதன்மைத் தரங்களுக்குக் குழுமம் உடபட்டது.

| $ மில்லியன்களில் | குழுமம் 2020 | 2019 |
|---|---|---|
| பொதுவான பங்குமுதல் அடுக்கு 1 மூலதனம் (CET1) | **33,231** | 32,366 |
| கூடுதல் அடுக்கு 1 மூலதனம் | **2,379** | 2,379 |
| அடுக்கு 1 மூலதனம் | **35,610** | 34,745 |
| அடுக்கு 2 மூலதனம் | **5,780** | 4,607 |
| **தகுதியுடைய மொத்த மூலதனம்** | **41,390** | 39,352 |
| **ஆபத்து-அளவிடப்பட்ட சொத்துகள்** | **225,441** | 226,318 |
| **மூலதனப் போதுமான தன்மை வீதம் (CAR) (%)** | | |
| CET1 | **14.7** | 14.3 |
| அடுக்கு 1 | **15.8** | 15.4 |
| மொத்தம் | **18.4** | 17.4 |

大華銀行